சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**ம.சா.1 பெரியநாயகி க/பெ. சிலம்பரசன்,** வயது.25

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:-</u>**

எனக்கு என் கணவருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை, மேற்படி என் கணவர் என்னை கொன்று விட்டு வேறு திருமணம் செய்து கொள்வேன் என்று மிரட்டுகிறார். மேற்படி விஷயத்தை ஊர்க்கவுண்டர் வீட்டிடம் வைத்து எதிர்மனுதாரர்கள் என்னிடம் கூறினார்கள். நான் இதற்கு முன் கூறிய 11 பவுன் தங்க நகைகளில் 6 பவுன் நகை என்னிடமும் மீதம் எதிர்மனுதாரர்களிடமும் உள்ளது. மீதமுள்ள 5 பவுன் நகை எதிர்மனுதாரரின் வீட்டிலுள்ள பீரோவில் உள்ளது. அதன் சாவியும் அவர்களிடமே உள்ளது. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள 11 பவுன் நகை, ரூ.50,000/-த்திற்கான ஆதாரம் என் வீட்டில் உள்ளது. அதற்கான ஆதாரங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் தற்போது என்னுடைய அம்மா வீட்டில் தங்கியுள்ளேன். நான் முதல் விசாரணையில் எதிர்மனுதாரர்கள் போன் மூலம் என்னை மிரட்டியதாக கூறியதற்கான ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் என்னிடம் உள்ளது. 07.03.2024 அன்று எதிர்மனுதாரர்கள் என்னை நேரடியாக திட்டியதற்கும் வரதட்சனை கேட்டு என்னை கொடுமை செய்து என் அம்மாவை திட்டியதற்கும் சாட்சிகள் உள்ளதா என்றால் இல்லை. 07.03.2024 அன்று நடந்த சம்பவத்திற்காக நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தார் வந்து புகார் வாக்குமூலம் பெற்றுச் சென்றார்கள். நான் நேரடியாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. அதன் பின்னர் என் கணவர் வீட்டிற்கு நான் செல்லவில்லை. என் கணவர் சேர்ந்து வாழ்வதற்காக என்னை பலமுறை அழைத்தும் நான் செல்லவில்லை என்றால் சரிதான், மேற்படி என் கணவர் எனது தந்தை மற்றும் தாயாரை தகாத வார்த்தைகளால் திட்டுவதே அதற்கு காரணம். ஊர்ப்பெரியவர்கள் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடந்தபோது, எதிர்மனுதாரர்கள் அவ்வாறு பேசினார்கள். மேற்படி என் தாயாரை தலையில் தாக்கியதற்கு வழக்கு ஏதேனும் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டதற்காக மருத்துவச்சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் Discharge Summary-ஐ தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரர்கள் பெயரில் உள்ள சொத்து விவரங்கள் குறித்த

ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் கூறுவதுபோல் சொத்து இல்லை என்றால் சரியல்ல, நான் அந்த இடத்திற்கு சென்று உள்ளேன். நான் கூறுவது போல் எதிர்மனுதாரர் ரூ.10,00,000/- நஷ்ட ஈடாக வழங்குவதற்கு அவருக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. அவர் கும்பகோணத்தில் பானிபூரி கடை வைத்துள்ளார். சுமார் 2 வருடங்களாக என் கணவர் வேலைக்கு செல்லாததால் அவர் குடும்பத்தார் தான் அவரை பார்த்துக்கொள்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சொத்துக்கள் அவர்களின் பூர்வீக சொத்து என்று நினைக்கிறேன். திருப்பத்தூரிலுள்ள எதிர்மனுதாரரின் வீட்டில் அவருடைய அக்கா குடியிருக்கிறார்கள் என்றால் புது வீடு கட்டுவதற்காக இருந்தார்கள், தற்போது வாடகைக்கு விடப்பட்டுள்ளது. பெருமாப்பட்டில் நாங்கள் தனித்தனியாக ஒவ்வொரு தளங்களில் தங்கியிருந்தோம் என்றால் சரியல்ல, அனைவரும் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தோம். எதிர்மனுதாரர்கள் என்னை துன்புருத்தவில்லை என்றால் சரியல்ல, என் கணவர் மற்றும் மாமியார் நகை வேண்டும் என்று என்னை கொடுமைப்படுத்தினார்கள். சார்பு நீதிமன்றத்தில் நான் என் கணவருடன் சேர்ந்து வாழ்வதற்காக எதிர்மனுதாரர்கள் வழக்கு தொடர்ந்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் எனது அம்மா வீட்டிற்கு சென்றவுடன் எதிர்மனுதாரர்களை பழிவாங்க வேண்டும் என்பதற்காக பொய்யான புகாரை அளித்துள்ளேன் என்றாலும் இவ்வழக்கிற்கும் எதிர்மனுதாரர்களுக்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:- இல்லை**</u>

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

JUDICIAL MAGISTRATE NO.II

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,

Tirupathur.